மறுபிரசுரம்

உ

# ஸ்ரீ சூரியகவசம்

## (தமிழாக்கம்)

ஆக்கியோன்

அருட்கவி சீ. விநாசித்தம்பி புலவர்

வேணி களஞ்சிய வெளியீடு

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

நாகேஸ்வரம் – அளவெட்டி

01.07.2003

உ

# ஸ்ரீ சூரியகவசம்

(தமிழாக்கம்)

ஆக்கியோன்

அருட்கவி சீ. விநாசித்தம்பி புலவர்

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
நாகேஸ்வரம் – அளவெட்டி

வேணி களஞ்சிய வெளியீடு

உ

ஓம் ஸ்ரீ கணேசாய நம

# சூரிய காயத்ரி

ஓம் அச்சத்துவஜாய வித்மஹே

பாச ஹஸ்தாய தீமஹி

தந்நோ சூர்ய ப்ரசோதயாத்

ஓம் பிரபாஹராய வித்மஹே

திவாகராய தீமஹி

தன்னோ சூர்யப் பிரசோதயாத்

# தியானம்

த்யாயேத் சூர்யம் அநந்தகோடி கிரணம்
தேஜோமயம் பாஸ்கரம்
பக்தாநாம் அபயப்ரதம் திநகரம்
ஜோதிர்மயம் சங்கரம்

ஆதித்யம் ஜகதீசம் அச்யுதம் ஆஜம்
த்ரைலோக்ய சூடாமணிம்
பக்தாபிஷ்ட வரப்ரதம் திருமணிம்
மார்த்தாண்ட மாத்யம் சுபம்

# காப்பு

ஆதிநாயகன் அன்புவி நாயகன்

பூதகாவலன் பொன்னுமை புத்திரன்

வேதமாபொருள் மேருவ ரைந்தவன்

சோதிஐங்கரன் துணையடி போற்றுவாம்

# சூர்ய தியானம்

செம்பருத்திப் பூநிறத்தன் திகழிரண்டு கரமுடையன்
அம்புயமா மலர்க்கையன் அழுகுவளர் சிந்தூர
அம்பரத்தான் மாலையினான் அணிந்திடுசெஞ் சந்தனத்தான்
எம்பரமன் சூரியனை இதயதியா னம் செய்வாம்

நன்மாணிக் கம்முதல நவமணியா பரணமுளான்
முன்மாவேழ் இழுக்கின்ற முந்திரதத் தமர்ந்திருப்பான்
பொன்மேரு மலைதன்னைப் போற்றுவல மாய்வருவான்
பன்மேனிச் சூரியனைப் பணிந்து தியானம் செய்வாம்

# கவசம்

அமரர்களின் அசுரர்களின் அதிபர்களும் வந்திறைஞ்சும்
அமையுமொளிக் கிரணங்கள் அலர வெளி வருபவனை
தமனியத்தைப் போன்மிளிரும் தாமரைநா தனைநினைந்து
நமதிதய மகிழ்வுடனே நற்கவசம் ஓதிடுவோம்

அதிபனாம் கிருணிமூர்த்தி அறிவுயர் தலையைக் காக்க
பதியுறு நெற்றிதன்னைப் பரமசூரியனார் காக்க
கதிருறு கண்ணிரண்டும் கருணைஆ தித்தன் காக்க
துதிபெறு செவியிரண்டும் சுடர்த்திவா கரனார் காக்க

நாசியைச் சுவாசஞான நயந்தரு பானு காக்க
தேசுணர் முகத்தைக்கேசிச் செங்கதிர் இரவி காக்க
வாசக நாவைக்கண்ணாய் வரும்ஜகந் நேத்ரன் காக்க
மீசக் கழுத்தை என்றும் விபாவஸூ விமலன் காக்க

நலந்தரு தோளிரண்டும் நவக்ரகத் தலைவன் காக்க
கலந்தரு கையிரண்டும் கவின்பிரபா கரனார் காக்க
பலன்தரு முள்ளங்கைகள் பயில் அப்ஜசுரனார் காக்க
குலந்தரும் இருதயத்தைக் குலவுபா னுமானார் காக்க

சுகம்பொலி இடையை வீர சுசப்தாச்சுவனார் காக்க
உகந்திடும் நாபிதன்னை உயர்நபோ மணியர் காக்க
அகந்தரு துவாதசாத்மா அசைவுறு மிடுப்பைக் காக்க
பகர்துடை இடுப்பைச் சேரும்பகுதியைச் சவிதா காக்க

வளந்திறல் துடையிரண்டும் வான்சுர சிரேஷ்டன் காக்க
உளங்குளிர் பாஸ்கரன்சில் லூறுமுழங் கால்கள் காக்க
விளங்காடு தசைகளெல்லாம் தேவமார்த்தாண்டன் காக்க
துளங்கிடும் இருபுறங்கால் தொல்திவிஷாம் பதி காக்க

சிறந்திடும் காலிரண்டும் தினமணிச் செல்வன் காக்க
திறந்திகழ் உடலனைத்தும் தெய்வமித் திரனார் காக்க
அறந்தரு வச்சிரா யுதமாய் அருளுமிக் கவசம் தன்னை
செறிந்துணர்ந்தோதும் பேற்றைத் திரிவிக்ரமன் தந்து காக்க

காதலாய் நின்றன் கவசம் ஓதுவோர்
வேதனை பயங்கள் மிடிதுயர் தீர்ப்பாய்
ஓதிஓர் வருடம் உபாசனை செய்வார்
பூதல மன்னராய்ப் பொலிவுற அருள்வாய்

வான்கற் பகத்தின் மணிநிழல் சூழ
தேன்கடம்பின் மலர்த் தேசுறு சூரிய
மண்டலத்திருக்கும் வரதசூ ரியனே
தொண்டருக்கினியசுதந்திரம் தருவாய்

மணம்பொலி தாமரை மலர்நிகர் கண்ணனே
பணிந்தார் இருவினைப் பற்றறுத் தாள்வாய்
அணைந்திடும் இந்திரன் அயன்அரிசங்கரன்
இணைந்தொன்றாகிய இறைவனே ஆயிரம்

திரள்கதிர்ச் செல்வனே செம்பொடி வாசனைப்
பொருள்விரவிய நீர் பொன்மலர்குங்குமம்
பூசுசெஞ் சந்தனம் புனைந்திடு தருப்பை
பூசனைப் பொங்கற் புத்தமு தெல்லாம்

தங்குபொற் றட்டில் சமர்ப்பணம் செய்தோம்
எங்களீஸ்வரனே இவையெல்லாம் ஏற்பாய்
செய்தநம் பிழைகள் செறிந்தமுன் வினைகள்
பொய் கொலை களவு போன்றிடு செயல்களால்

வரும்பழிபோக்கி மனங்குளிர் வாழ்வும்
பொருந்திய மனைவி புத்திரர் சுற்றம்
இனிது சிறக்க இருதய சுத்தமும்
கனிதருசுகமும் கல்வியும் நிதியும்

தருமமும் தவமும் தழுவும் போக்கும்
குருதாய் தந்தையில் குறையா அன்பும்
தந்தெமைக் காப்பாய், சலம் நீர் காற்று
வெந்தழல் இடிமின் விஷங்கள் பிராணிகள்

வஞ்சனைப் பேய்கள் வருத்தும் நோய்கள்
அஞ்சிடும் பகைகள் அடுமா யுதங்கள்
எவற்றினாலாயினும் இடர் அணுகாமல்
சிவசூரியனே சிங்கப் பதியே

காக்கக் காக்கக் ககனனே காக்க
ஆக்கும் ஒன்பான்கோட்கதிபனே காக்க
சரணம் சரணம் சராசரமுதல்வா
சரணம் சரணம் சற்குருநாதா
சரணம் சரணம் சதுர்மறைத் தேவா
சரணம் சூரியத் தந்தையே சரணம்

*சுபம்*

(ஆராதனை செய்க)

# இக் கவசத்தில் சூரியனைக் குறிக்கும் நாமங்கள்

கிருணி மூர்த்தி
ஆதித்தன்
திவாகரன்
பானு
கேசி – கதிர்களாகிய ரோமமுடையவன்
இரவி

| | | |
|---|---|---|
| ஜகந்நேத்திரன் | – | உலகிற்குக் கண்ணாயிருப்பவன் |
| விபாவஸ¤ | | |
| பிரபாகரன் | – | ஒளிப்பிரகாசமுள்ளவன் |
| அப்ஜசுரன் | | |
| பானுமான் | | |
| சுசப்தாச்சுவன் | – | நல்ல ஏழு குதிரையுடைய தேரில் வருவோன் |
| நபோமணி | – | ஆகாயத்தில் ஒளிரும் மணி |
| துவாதசாத்மா | – | 12 வடிவுடைய பரமாத்மா |
| சவிதா | – | ஒளியும் பகலும் தருபவன் |
| சுரசிரேஷ்டன் | – | தேவர்களில் சிறந்தவன் |
| பாஸ்கரன் | | |
| மார்த்தாண்டன் | | |

| | | |
|---|---|---|
| திவிஷாம்பதி | | |
| தினமணி | – | பகலில் மணி போன்றவன் |
| மித்திரன் | – | சிறந்த நண்பன் |
| திரிவிக்ரமன் | | |
| ககனன் | – | ஆகாய சஞ்சாரி |


தமனியம் : பொன்

மீசரம் : மேலானது

அம்பரம் : ஆடை



# கோமாதா எங்கள் குலமாதா



கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்

Harikanan Printers, 424, K.K.S Road, Jaffna, T.P:-021-2222717